THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Wednesday, the 22nd February 1961

The House met in the Assembly Chamber, Fort St. George, at forty minutes past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

MR. SPEAKER : கனம் பக்தவத்சலம் அவர்கள் சென்னையில் இல்லை. அவர்கள் பதிலளிக்கவேண்டிய கேள்விகள் நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

As the hon. Member who gave notice of qestion No. 303 is not in his seat, the question and answer will be printed in the proceedings.

Morthana dam

* 303 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குடியாத்தம் தாலுகாவில் மோர்தாறு அணை கட்டுவதற்காக பணம் ஒதுக்கப்பட்டுள்ளதா ?

(இ) எப்போது ஆரம்பிக்கப்படும் ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) No provision has been made.

(*b*) Does not arise.

Conference (Highways Engineers)

* 342 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 20-ந் தேதி சென்னையில் நடந்த பெருவழித்துறை சூப்ரன்டெண்டிங் எஞ்சினீயர்கள் **(Superintending Engineers)** கூட்டத்தின் ஆலோசனைகள் சர்க்காருக்கு கிடைத்தனவா ?

(இ) அப்படியானல், அதன் விவரமென்ன ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) A copy of the proceedings of the conference has been placed in the Library of the Legislature.

[22nd February 1961

SRI S. M. ANNAMALAI : அந்த சிபார்சுகளின் பேரில் சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன? எந்தெந்த சிபார்சுகளை அமல் நடத்தியிருக்கிறார்கள்?

THE HON. SRI P. KAKKAN : சிபார்சுகள் இப்பொழுதுதான் செய்யப்பட்டு இருக்கின்றன. எந்தெந்த சிபார்சுகளை அமல் நடத்தவேண்டுமோ, அங்கே இருக்கக்கூடிய சூப்பிரண்டெண்டிங் எஞ்சினீயர், சிப் எஞ்சினீயர் ஆகியோர் அரசாங்கத்தினுடைய அப்ரூவல் வாங்கி அமல் நடத்த தக்க ஏற்பாடு செய்வார்கள்.

SRI S. M. ANNAMALAI : மராமத்து இலாகாவைச் சேர்ந்த நான்கு இலாக்காக்களையும் ஒன்றாக இணைக்கவேண்டுமென்று சிபார்சு செய்யப்பட்டுள்ளதா? அப்படியாயின் சர்க்கார் அதன் மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

THE HON. SRI P. KAKKAN : அப்படி ஒன்றும் அங்கு முடிவு எடுக்கப்படவில்லை.

Coastal Road

*357 Q.—SRI S. M. ANNAMALAI : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 23-ந் தேதியில் நட்சத்திரக் குறியிடாத கேள்வி எண் 17-க்கு அளித்த பதிலையொட்டி முத்துப்பேட்டையிலிருந்து, மைமிசல் (via) ராஜமடம் கடற்கரை பாதை அமைக்கும் விஷயமாக மத்திய சர்க்காரிடமிருந்து பதில் வந்துவிட்டதா?

(இ) அப்படியானால், அதன் விவரமென்ன?

THE HON. SRI P. KAKKAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI S. M. ANNAMALAI : இந்தப் பாதையை மூன்றாவது திட்டத்தில் சேர்க்கவேண்டுமென்று சென்னை சர்க்கார் எப்பொழுது மத்திய சர்க்காருக்கு எழுதினார்கள்? அது ஏன் பரிசீலனை செய்யப்படாமல் மத்திய சர்க்காரிடமிருந்து பதில் வராமல் இருக்கிறது?

THE HON. SRI P. KAKKAN : மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க வேண்டுமென்பதற்காகத்தான் ஏற்கெனவே பரிசீலனை செய்யப்பட்டு வந்திருக்கிறது. இந்த ரோடின் நீளம் கொஞ்ச நஞ்சமல்ல. 451 மைல் நீளம் இருக்கிறது. இப்பொழுது மூன்றாவது திட்டத்தில் 5 கோடி ரூபாய் வரை செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கத்தினுடைய அங்கீகாரம் பெற்ற பிறகு அமல் நடத்தப்படும்.